வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 19.09.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 262 | பக்கங்கள் : 08

### அரியாலை மனித புதைகுழி:

## அகழ்வுக்கான பாதீடு நீதிமன்றில் சமர்ப்பிப்பு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 19

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுக்கான பாதீடு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நேற்றைய தினம் இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே சட்ட மருத்துவ அதிகாரி பாதீட்டை மன்றில் சமர்ப்பித்தார்.

பாதீட்டை ஏற்ற நீதிமன்றம் முன்னேற்ற அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் ஒக்ரோபர் 1ஆம் திகதிக்கு வழக்கை தவணையிட்டது.

பாதீட்டுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றால் எதிர்வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் ஆரம்பமாகும் என்று சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் தெரிவித்தார். (ஐ)

### மாகாண சபைகள் தேர்தல்

# சகல கட்சிகளும் ஒருமித்து முடிவை எடுக்கவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் இந்தியத் தூதுவர் வலியுறுத்து



கொழும்பு, செப்ரெம்பர் 19

**மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும் ஒருமித்த தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தம்மை சந்தித்த ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் வலியுறுத்தியுள்ளார்.**

அத்துடன், "மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்", என்றும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற இந்த சந்திப்பில் இலங்கையின் சமகால அரசியல் நிலவரம், இந்திய அனுசரணையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் பேசப்பட்டன என்று

07

## யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து; நேற்று ஒருங்கிணைப்பு கூட்டம்!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம்,செப். 19

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் போக்குவரத்தை வலுப்படுத்தி மக்களுக்கு இலகுவான - நவீனத்தை உள்ளடக்கிய போக்குவரத்து கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அரச அதிபர் ம. பிரதீபனின் ஒழுங்கமைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் போக்குவரத்து தொடர்பில் நிலவும் சவால்கள், சீரமைப்புகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது, போக்குவரத்து சேவையை 3 கட்டமைப்புகளின் ஊடாகக் கட்டமைத்து தொடர்புகளை பேணப்படும். இந்தத் தொடர்பை இரண்டு செயலாளர்கள் மாவட்ட செயலரின் ஆலோசனையுடன்

07

## அநுரவின் ஆட்சி காலத்தில் இன, மத வாதங்கள் ஒழிப்பு

### அமைச்சர் நளிந்த சொல்கிறார்

மட்டக்களப்பு, செப். 19

ஜனாதிபதி அநுர குமார நாட்டை பொறுபேற்ற பின்னர் ஏற்கனவே இருந்த இனவாதம், மதவாதம் ஒழிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம், சிங்களம், தமிழ் என்ற பேதமின்றி அனைவரும் ஜனநாயக வழியில் ஒன்றுபட்டிருக்கிறார்கள் - என்று சுகதாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், இனவாதம், மதவாதம், தொடர்பான செயல்பாடுகளை எந்தவொரு நபருக்கும் இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

07

## திருமலை கடலில் நிலநடுக்கம்

திருமலை,செப். 19

திருகோணமலை கடற்பரப்பில் நேற்று பிற்பகல் 4.06 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவிச்சரிதவியல் அளவை, சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

3.9 றிக்டர் அளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் திருகோணமலையில்

11

## 240 கிலோ கஞ்சா கிளிநொச்சியில் கைப்பற்றப்பட்டது

கிளிநொச்சி, செப். 19

கிளிநொச்சியில் 240 கிலோ கேரள கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தருமபுரம் - கல்லாறு பகுதியிலேயே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது. வீடு ஒன்றின் மலசலகூடக் குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் தருமபுரம் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் நடத்திய சோதனையிலேயே இந்தக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. எனினும், இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ)

## மோட்டார் சைக்கிள்களே அதிக விபத்துக்கு காரணம்

### யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விபத்துகளில் அதிகமானவை மோட்டார் சைக்கிள்களாலேயே ஏற்படுகின்றன. குறிப்பாக, எவ்.சற் மோட்டார் சைக்கிள்களை அதிவேகமாக செலுத்தியதாலேயே ஏற்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் போக்குவரத்து தொடர்பில் நடைபெற்ற

07

## மின்சார சபை ஊழியர்கள் வீதியை மறித்து போராட்டம்

கொழும்பு, செப். 19

மின்சார சபையை நான்கு நிறுவனங்களாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினமும் இலங்கை மின்சார சபை பிரதான பணிமனை முன்பாக கொட்டும் மழையிலும் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியை மறித்து நூற்றுக்கணக்கானவர்கள் முன்னெடுத்த போராட்டத்தால் காலி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

07



## ரோபோ சங்கர் காலமானார்

சென்னை, செப். 19

தென்னிந்திய நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் (வயது 46) உடல் நல குறைவால் நேற்று வியாழக்கிழமை காலமானார்.

விஜய், அஜித், தனுஷ், சிவகாரத்திகேயன் என பல முன்னணி நடிகர்களுடன் அவர் இணைந்து நடித்திருந்தார்.

சென்னையில் படப்பிடிப்பில் இருந்த அவர் நேற்றுமுன்தினம் திடீரென மயங்கி விழுந்தார். இதைத் தொடர்ந்து அவர் தனியார் மருத்துவமனையில்

07

## இந்த அரசின் காலத்திலேயே வடக்கு எழுச்சிபெற்று மிளிரும்

யாழ்ப்பாணம், செப். 19

வடக்கு மாகாணம் விரைவில் எழுச்சி பெற்ற மாகாணமாக மிளிரும். இந்த அரசாங்கத்தின் காலத்தில் நிச்சயம் இது நடக்கும் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் சீநோர் படகு தளத்தின் புனரமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டு

07

## மன்னார் காற்றாலை விவகாரம்: கொழும்பில் இன்று போராட்டம்!

மன்னார், செப். 19

மன்னாரில் இடம்பெறும் காற்றாலை மின் திட்டம், கனிய மணல் அகழ்வு என்பவற்றுக்கு எதிராக இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் போராட்டம் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகம் முன்பாக பிற்பகல் 2 மணியளவில் இந்தப் போராட்டம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்களான மன்னார் பிரஜைகள் குழு அறிவித்துள்ளது.

இதில், மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலை கௌரவமாக நடத்த முயற்சி செய்யுங்கள்!

## மூத்த போராளி மனோகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 19

எதிர்வரும் காலங்களிலாவது திலீபன் நினைவேந்தலை கௌரவமாக நடத்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் முன்வரவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த போராளியான பசீர் காக்கா என்று அறியப்பட்ட மு. மனோகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவற்றின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தியாக தீபம் திலீபனின் ஈகத்தின் பெறுமதியையோ தமிழ்த் தேசியம் என்ற விடயத்தையோ விளங்கிக் கொள்ளாமல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கோமாளிக் கூத்துகளை நடத்துவதையும் எமது போராட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் தலைகுனியும் வகையில் தெருச் சண்டியர்கள் போல் நடந்து கொள்வதையும் சகிக்க முடியாமலுள்ளது.

மாற்றுக் கருத்துடையோருக்கு அஞ்சலி செலுத்துவதும் இறுதிச் சடங்கு போன்றவற்றில் கலந்துகொள்வதும் ஒரு நாகரிக சமூகத்தில் நடக்கும் விடயங்களே. எல்லாவற்றையும் 13 ஆவது திருத்தத்தை ஏற்றோர் - எதிர்ப்போர் என்ற வாய்ப்பாட்டில் துரோகி - தியாகி என வகைப்படுத்தும் புதியதோர் ஒழுங்கைக் கொண்டுவரத் துடிக்கின்றனர். வட, கிழக்குக்கு அப்பாலுள்ள எமது உறவுகள், தென்னிலங்கையிலுள்ள நடுநிலையானோர் எமது போராட்டத்தையும், திலீபனின் தியாக வரலாற்றையும் அறியவிடாமல் திரைபோட முனைவது சிறுபிள்ளைத்தனமானது.

திலீபனின் நினைவேந்தலில் தமது அரசியல் எதிரிகளான முன்னாள் சகாக்களைச் சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் கருத்துகளை வெளியிட்ட போது நிகழ்வின் ஏற்பாட்டாளரான பொன் மாஸ்டரிடம் எனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தேன். சுகாஷை நியாயப்படுத்தும் கருத்துகளைத் தான் பொன் மாஸ்டர் தெரிவித்தார். நிகழ்ச்சி ஒழுங்கின்படி மலர் வணக்கம் தொடங்கிய வேளை திலீபனுக்கு மாலை சூட்ட வரிசையில் நின்றேன். நீங்கள் பிறகு மாலை போடுங்கள் என உத்தரவிட்டார் ஒருவர். நான் திரும்பச் சென்றேன். உடனே அங்கே வந்த ஜனநாயக போராளிகள் அமைப்பினர் என்னைக் கூட்டிக்கொண்டு போய் மாலை சூட்ட வைத்தனர். அன்று என்னைத் தடுத்தவர் தான் நேற்று (நேற்று முன்தினம்) திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வந்த அமைச்சர் சந்திரசேகரிடம் தமது எதிர்ப்பை வெளியிட ஆரம்பித்து எங்களை நாகரிகமற்ற மக்கள் கூட்டமாக வெளிப்படுத்த முனைந்தார். தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் அரசியல் அறமற்றவை.

கடந்த சில வருடங்களாக ஓர் அணியினர் மாநகர சபைக்குச் சொந்தமான இடத்தில் உரிய கட்டணம் செலுத்தி திலீபனின் வரலாறு - ஈகம் தொடர்பாக விடயங்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தவும் மூத்த சந்ததிக்கு நினைவூட்டவும் முயன்றனர். அவர்களின் அரசியல் எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். அவர்கள் செய்தது காத்திரமான பணி. இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த நிலத்துக்குரிய வாடகைப் பணத்தை முன்னரே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் யாழ். மாநகர சபையில் கட்டிவிட்டனர். கஜேந்திரகுமார் மூன்றவது தலைமுறை பணக்காரர் என்ற வகையில் பணத்தால் எதையும் தடுத்து நிறுத்த முடியும் என்று நினைத்திருக்கிறார் போல் உள்ளது. மாநகர சபை நிலத்துக்கே இவ்வளவு கோளாறு பண்ண முனைந்த கஜேந்திரகுமார் தமது குடும்பத்தினருக்கு சொந்தக்காணிகள் விடயத்தில் பெருந்தன்மையைக் காட்ட முனைவாரா? அது சூரியன் மேற்கே உதித்தாலும் சரிவராத விடயம்.

திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தபோது அங்கேயிருந்தவர்களில் பெரும்பாலும் நான் மட்டுமே நாட்டில் இருக்கிறேன். அதுபோலவே திலீபனுக்கான நினைவுத் தூபியை அமைக்க தனித்துத் தீர்மானம் எடுத்துச் செயல் படுத்தி முடித்த சீ. வீ. கே. சிவஞானத்தையும் இவர்கள் இதே தூபியடியில் அவமதித்து வரலாற்றில் கறுப்புப் பதிவுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

எப்படியோ 13ஆம் திருத்தச் சட்டத்தை ஏற்ற அரசின் அமைச்சர்களாக இருந்த சந்திரசேகரன், ஆறுமுகம் தொண்டமான், ஹக்கீம் போன்றோர் கிளிநொச்சிக்கு வருகைதந்த விடயங்ளையும் அவர்கள் கௌரவமாக நடத்தப்பட்டமை பற்றியும் வரலாறு தெரிந்த யாராவது தமிழ்க் காங்கிரஸ் கட்சியினருக்குச் சொல்லி வையுங்கள். எதிர்வரும் காலங்களிலாவது திலீபன் நினைவேந்தலை கௌரவமாக நடத்த ஒத்துழைக்குமாறு இவர்களை வேண்டிக்கொள்ளுங்கள் - என்றார். (ஐ)

# தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் அஞ்சலி!



வவுனியா, செப். 19

தியாக தீபம் திலீபனின் 38ஆவது நினைவுதினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாநகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுதூபியில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது திலீபனின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர்.

இதேநேரம், திலீபன் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட நாளான எதிர்வரும் 26ஆம் திகதியும் இந்த இடத்தில் நினைவேந்தல் நடைபெறவுள்ளது. இதேநேரம், எதிர்வரும் 25ஆம் திகதி ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டமும் நடைபெறவுள்ளது. (ஐ-10)


# ஏழு இந்திய மீனவர்களுக்கும் செப். 24 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 19

கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதான இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், இவர்களின் வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதையடுத்து, 7 மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-05)



தியாக தீபம் திலீபனின் நான்காம் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று அவரின் நினைவிடத்தில் முன்னெடுக்கப்பட்ட போது...!
(படம் - ஐ. சிவசாந்தன்)

# வலி. தென்மேற்கு சபையின் அமர்வில் அமைதியின்மை!

யாழ்ப்பாணம், செப். 19

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் அமைதியின்மை நிலவியது.


வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது.

அமர்வில், மானிப்பாய் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சந்தைகளின் அபிவிருத்தி தொடர்பாக விவாதம் எழுந்தது. இதன்போது உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், சபை கட்டுப்பாடின்றி செயல்பட்டது.

இதனால், கோபமடைந்த தவிசாளர், இனி சபையை கடுமையாக நடத்த வேண்டிய தேவை ஏற்படும். கதைப்பதற்கு இனி அனுமதி தர முடியாது - என்று கூறினார்.

தவிசாளரின் இந்தக் கருத்துக்கு எதிராக உறுப்பினர்கள் கருத்துகளை வெளிப்படுத்தினர். இதைத் தொடர்ந்து சபை அமைதியிழந்தது. (ஐ-05)

# ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கக்கோரி போராட்டம்!



வவுனியா, செப். 19

வவுனியா கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி பெற்றோர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் வலயக் கல்வி பணிமனை, மாகாண கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணப்படவில்லை. இதனால், மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-10)

# பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் சாட்சியமளிக்க பாதுகாப்பு அறை

கொழும்பு, செப். 19

சிறுவர்கள் பாதுகாப்பாக சாட்சியம் வழங்குவதற்கான சாட்சிய அறைகளை நிறுவுவது, நாட்டின் நீதித்துறை அமைப்பில் ஒரு திருப்பு முனையாகும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பாதுகாப்பாக சாட்சியம் வழங்கக்கூடிய டிஜிற்றல் வசதிகளுடன் கூடிய சாட்சிய அறையை கண்டி மேல் நீதிமன்றத்தில் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி, பாதிக்கப்பட்டவர்களாக, சட்டத்தின் முன் வரும் சிறுவர்கள் இனி பாதுகாப்பாக சாட்சியம் வழங்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்தநிலையில், நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இந்த வசதிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்த வசதிகளின் ஊடாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள், நீதிமன்ற வளாகத்தில் தனியொரு அறையிலிருந்து சாட்சியமளிக்க முடியும்.

அத்துடன், சிறுவர்கள் எதிர்கொள்ளக்கூடிய அச்சம் மற்றும் அதிர்ச்சியையும் குறைக்க முடியும் என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.09.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# இந்தியாவின் அதிருப்தியின் உச்சம்

இந்தியா மீண்டும் அதன் நீண்டகால நிலைப்பாடான அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடரில் இதனை மீண்டும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியிருக்கிறது.

இந்தியாவின் நிலைப்பாடும் புதிதல்ல. இந்தியா இதனை மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தவதும் புதிதல்ல. இதனை ஒரு வகையில் சடங்கு போன்றே இந்தியா நிறைவேற்றி வருகிறது. தொடர்ந்தும் இந்தியா இதனை வலியுறுத்திக் கொண்டேயிருக்கும். ஆனால், இவ்வாறான வலியுறுத்தலால் என்ன நடக்கும் என்று கேட்டால் அதற்கான பதில் சிக்கலானது. ஏனெனில், தமிழர் தரப்பு சரியாகவும் நேர்மையாகவும் செயல்படாதுவிட்டால் இது ஒரு தொடர் கதையாகத் தொடரும்.

அண்மையில், இந்தியத் தூதுவருக்கும் தமிழ் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருக்கிறது. இதன்போது, வழமைபோல் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என்று தூதுவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இராஜதந்திரிகளிடம் எவ்வாறு உரையாடுவது என்று தெரியாமல் பேசியபோது சற்று எரிச்சலடைந்த இந்தியத் தூதுவர் தமிழ் கட்சிகள் ஒருவரை ஒருவர் நெற்றியில் சுடுவதற்கான மனோநிலையுடன் இருக்கின்றனர். இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும் என்றவாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை சந்திக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இந்திய இராஜதந்திரிகள் ஒரு விடயத்தைத் திரும்பத்திரும்பக் கூறிவந்திருக்கின்றனர். அதாவது, தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக விடயங்களைக் கையாள வேண்டும் - அப்போதுதான் நாங்கள் உங்களுக்கு உதவமுடியும். ஆனால், யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட, இன்றுவரையில் ஒற்றுமையாக செயல்படும் வெளிச்சத்தைக் காண முடியவில்லை. இந்தப் பின்புலத்தில்தான் அதிருப்தியின் உச்சத்தில் தமிழ்க் கட்சிகள் ஒருவரையொருவர் நெற்றியில் சுடுவதற்கு காத்திருக்கின்றனர் என்று தூதுவர் கூறியிருக்கிறார்.

உண்மையில், ஈழத் தமிழர் அரசியல் தலைமைகள் எவரையும் நம்பிச் செயல்படும் நிலைமையில் இந்தியா இல்லை. ஒரு காலத்தில் தலையிட்டு விரல்களை சுட்டுக் கொண்ட எண்ணத்தோடுதான் மிகுந்த எச்சரிக்கையுடன் விடயங்களைக் கையாண்டு வருகிறது. அவ்வப்போது பதின்மூன்று தொடர்பில் உச்சரிப்பதுடன் இந்தியாவின் ஈடுபாடு பெருமளவுக்கு சுருங்கிவிட்டது. இந்தியாவின் ஈடுபாடு மீண்டும் அதிகரிப்பதும் அல்லது இப்படியே கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் சென்று முடிவதும் தமிழ் கட்சிகளின் தூரநோக்கான செயல்பாடுகளிலேயே தங்கியிருக்கிறது.

தமிழ் கட்சிகள் இப்படியே சென்றால் அதாவது, இந்தியத் தூதுவர் குறிப்பிட்டதுபோல், ஒருவருக்கொருவர் நெற்றியில் துப்பாக்கி நீட்டும் மனோபாவத்துடன் செயல்பட்டால் ஒரு கட்டத்தில் இந்தியா ஈழத் தமிழர்களை முற்றிலுமாகக் கைவிட்டுவிடும் நிலையும் ஏற்படலாம். ஒருவேளை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் இதனைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கவும் கூடும்.

# வடக்கு - கிழக்கில் தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## மந்திரிமனையை பார்வையிட்ட சிறீதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், செப். 19

வடக்கு கிழக்கில் தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை யாழ் நல்லூர் மந்திரிமனையை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்ட பின்னர் அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆட்சி செய்த சங்கிலிய மன்னனின் மந்திரி மனை, நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

அந்த மந்திரிமனை, உடைந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.

அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப் பட்டிருந்தன.

அந்த கம்பிகள், அண்மையில் திருட்டு போன நிலையில், குறித்த பகுதி இடிந்து விழுந்துள்ளது.

வரலாற்று தொன்மை மிக்க மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டும் என பலரும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொது அமைப்புக்கள் ஆதன வரியை செலுத்தவேண்டும்!

## வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர்

வவுனியா, செப். 19

பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுஅமைப்புக்கள் நிலுவையில் உள்ள ஆதனவரியை செலுத்தவேண்டும் என வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் பா.பாலேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் உள்ளூராட்சி வாரம் தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இவ்வாரம் முழுவதும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் மகாறம்பைக்குளம் பகுதியில் ஆதனவரி மதிப்பீடு தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரதேசசபைக்குட்பட்ட ஆதனங்களில் இருந்து 12 வீதமாகவே தற்போதும் வரி அறவிடப்பட்டு வருகின்றது.

எமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் தாங்களாக வருகை தந்து வரிப்பணத்தை செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் நடமாடும் சேவைகள் மூலமாகவும் வரிசெலுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு நாம் தெளிவூட்டி வருகின்றோம்.

மக்களின் வரிப்பணத்தின் மூலம் வட்டாரங்களில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்குரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். குறிப்பாக கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்கள் ஆதன வரியினை செலுத்தாத நிலைமை உள்ளது. எனவே அவர்கள் தாங்களாக முன்வந்து நிலுவையில் உள்ள தொகையைச் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

## மூளாயில் கண் பரிசோதனையும் இலவச மூக்கு கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், செப். 19

தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் மூளாய் வேரம் பகுதியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்கு கண்ணாடி வழங்கலும் அறநெறிப் பாடசாலை ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி சிவபாலசுப்பிரமணியம் ,விசேட அதிதிகளாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.ஜெயந்தன் ,மூளாய் கிராம சேவையாளர் சிவரூபன் ,வலிகாமம் மேற்கு கலாசார உத்தியோகஸ்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 19 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 03
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரயோதசி




**மேடம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

**இடபம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கொடுக்கும்.

**மிதுனம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் தேவையற்ற வீண் இழப்புகள் ஏற்படும். மறைமுக நெருக் கடிகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**துலாம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மகரம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும்.

# சட்டவிரோத சுருக்குவலை மீன்பிடியால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோத சுருக்குவலை மீன்பிடி இடம்பெற்று வருவதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வடமராட்சி வடக்கு மீனவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கட்டைக்காடு மீனவர்கள் அதிகளவானோர் சட்டவிரோத சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபடுவதால் சிறிய மீனினங்கள் பிடிக்கப்படுவதாகவும் அம் மீனினங்கள் இறந்த நிலையில் மீண்டும் கடலில் கொட்டப்படுவதாகவும் இதனால் தற்போது சிறு மீன்பிடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தடுக்க கடற்படையினர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும், இதற்குப் பதிலளித்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி, இவ்வருடமும் அதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கூறினார். (எ-05)

# மணலகழ்வு, வாள்வெட்டுக்கு நிச்சயம் முடிவு கட்டுவோம்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், செப். 19

வடமராட்சி - கற்கோவளம் பகுதியில் இடம்பெறும் மணல் அகழ்வு, வாள்வெட்டு மற்றும் அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகர், உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் கற்கோவளம் பகுதிக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை நேரில் சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன் போது, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் கும்பலால் மீன்வாடிகள் அடித்து நொறுக்கப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும், மீனவர்கள் மீதான வாள்வெட்டு தாக்குதல் பற்றியும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டன.

அதனை தொடர்ந்து மீனவர்கள் மற்றும் மக்களிடம், நடந்தவற்றை கேட்டறிந்து பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் எடுத்துக் கூறினார்.

அத்துடன், சட்டவிரோத போதைப்பொருள் பாவனை மற்றும் வாள்வெட்டு தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றுக்கு நிச்சயம் முடிவு கட்டப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

காட்டாட்சி நிலவிய காலப் பகுதி முடிந்துவிட்டது. இனி சட்டத்தின் ஆட்சிதான் நடக்கும் என்பதை வன்முறை கும்பல்கள் புரிந்துகொள்ள வேண்டும். சட்டத்தின் பிடிக்குள் இருந்து தவறிழைத்தவர்கள் தப்பவே முடியாது - என்றும் இதன்போது அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# அருவருக்கத்தக்க அரசியலுக்காக தியாகியை பயன்படுத்தும் முன்னணி

## இளங்குமரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 19

நினைவேந்தல்களை வைத்து தேர்தல் கணக்கு அரசியல் செய்யும் முன்னணியின் செயல் எப்போது நிறுத்தப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் கேள்வி எழுப்பியுள்ளார். அருவருக்கத்தக்க அரசியலுக்காக

தியாகியை முன்னணி பயன்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தியாக தீபம் திலீபன் அண்ணனின் நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்க வந்த அமைச்சர் சந்திரசேகருக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையைத் தடுப்பது, தமிழ்க் காங்கிரஸ் முன்னணியின் செயல் எனில் - அது அயோக்கியத்தனத்தின் உச்சமே ஆகும்.

யாரும் யாரையும் அஞ்சலிக்கலாம் அதுதான் மனித மாண்பு. திலீபன் அண்ணன் போராடிய காலத்தில் அவருக்கு எதிராக நின்ற பலர் இன்று நினைவேந்தல்களில் பங்கேற்கின்றனர். அவர்களை முன்னணியே தேர்தல் அரசியலுக்காக அருகில் நிறுத்திக் கொள்கிறது. ஆனால், மற்றவர்களை அனுமதிக்க மறுப்பது எத்தகைய முரண்பாடு?

ஒரு மாவீரனின் - தியாகியின் நினைவேந்தலை வாக்குக் கணக்குப் பொருட்டு அரசியல் ஆக்கிரமிப்பு செய்வது ஒருபோதும் மன்னிக்க முடியாத குற்றமாகும். இது மனித மாண்புகளை மீறிய காட்டுமிராண்டித்தனமே தவிர வேறில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-05)

திருநெல்வேலிச் சந்தியில்

# மாமனிதர் துரைராஜாவின் சிலையை நிறுவ தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையை திருநெல்வேலிச் சந்தியில் நிறுவுவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

பேராசிரியர் துரைராஜாவுக்கு சிலை அமைப்பதற்கு இடமொன்றை ஒதுக்குவது தொடர்பில் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தவிசாளர் ப. மயூரனால் அறிவிக்கப்பட்டது.

தவிசாளர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

“போலிகள் மலிந்து விட்ட இன்றைய தேசத்தில் போலியின்றி வாழ்ந்து, தேசப்பற்றோடும் மனித நேயத்தோடும் தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் அவர் ஆற்றிய பணி மகத்தானது. அவரது அறிவியல், பண்பியல், வாழ்வியல் என்பன இந்த மண்ணின் ஒரு வரலாறு அடையாளம்.

அவ்வாறானவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதனை எமது அடுத்த தலைமுறைக்கு சொல்ல வேண்டியதும் இப்படியானவர்களை எமது இளைய தலைமுறையினர் தங்களது வாழ்வியலுக்கான வழிகாட்டியாக பின்பற்ற வேண்டும் என்பதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபை இவ் உயரிய பணியை மேற்கொள்கின்றது”- என்றார்.

இதேவேளை, திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் மாமனிதர் துரைராஜாவின் சிலையை நிறுவுவதற்கான பொருத்தமான இடம் உள்ளது. இதில் சிலையை நிறுவ சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (எ-05)

# கஞ்சா கலந்த மாவாவுடன் யாழில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப். 19

நாவாந்துறை - மண்பிட்டி பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா கலந்த மாவா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 470 கிராம் கஞ்சா கலந்த மாவா மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



விசாரணைகளின் பின்னர், குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையை டிஜிற்றல் மயப்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு!

## ஜனாதிபதி அநுரகுமார கூறுகிறார்

கொழும்பு, செப். 19

அரசசேவையை முழுமையாக டிஜிற்றல் மயப்படுத்த 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கிடப்படும். அடுத்த ஆண்டு முதல் சகல அரச கொடுக்கல் வாங்கல்களும் டிஜிற்றல்மயப்படுத்தப்படும்.மக்களுக்கு சிறந்த சேவை வழங்குதற்காகவே அரச சேவைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அரச சேவையாளர்கள் மக்களுக்காக செயற்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



கடவத்த- மீரிகம மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி பணிகளை நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தை மலினப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதிகள் இந்த நாட்டில் உள்ளார்கள்.ஊர்வலம் போன்று செல்கிறார்கள், அழுகிறார்கள், பழிவாங்கல் என்று குறிப்பிடுகிறார்கள்.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சிறப்பு சலுகை வழங்க முடியாது. ஆகவே குற்றஞ்சாட்டுபவர்கள் குற்றம் சாட்டட்டும்.ஊர்வலம் செல்லட்டும்.

அரச சேவையாளர்கள் இன்று அச்சத்துடன் செயற்படுவதாக குறிப்பிடப்படுகிறது. கடந்த கால ஆட்சியாளர்கள் முன்பாக அரச அதிகாரிகள் வாய்திறப்பதில்லை. ஆட்சியாளர்களின் தீர்மானம் சட்டமாக காணப்பட்டது. இன்று அவ்வாறான நிலையா உள்ளது. அரச சேவையாளர்கள் தற்போது தான் சுயாதீனமாக செயற்படுகிறார்கள்.

அரசசேவையை முழுமையாக டிஜிற்றல் மயப்படுத்த 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கிடப்படும். அடுத்தாண்டு முதல் சகல அரச கொடுக்கல் வாங்கல்களும் டிஜிற்றல் மயப்படுத்தப்படும்.மக்களுக்கு சிறந்த சேவை வழங்குதற்காகவே அரச சேவைக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அரச சேவையாளர்கள் மக்களுக்காக செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# குறைந்த விலையில் மின்சாரம் கொடுப்பதே அரசின் நோக்கம்!

கொழும்பு, செப். 19

இலங்கையை பிராந்தியத்தில் மிகக் குறைந்த மின்சார விலைகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக மாற்றவும், முழு மக்களுக்கும் நியாயமான மற்றும் குறைந்த விலையில் மின்சாரம் பெற்று கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய மின்சார கட்டமைப்பின் தேவைகளில் 12 சதவீதம் அல்லது 350 மெகாவட் வழங்கும் கெரவலப்பிட்டி "சோபாத னவி" ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகம் தற்போது எரிசக்தித் துறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சகாப்தத்தை கடந்து வருகிறது.

எப்போதும் மாறிவரும் நுகர்வோர் தேவைகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு ஏற்ப, நிலைத்தன்மை மற்றும் புதுமைக்கு முன்னுரிமை அளிக்கிறது.

இந்த உலகளாவிய போக்குகள் இருந்தபோதிலும், அதிக மின்சார விலைகளைக் கொண்ட பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் இலங்கை உயர்ந்த இடத்தில் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த கட்டுப்படியாகாத எரிசக்தி செலவு, நாடு உற்பத்தி பொருளாதாரத்துக்கு மாறுவதற்கும், பல தசாப்த கால தவறான நிர்வாகத்தால் விழுந்த பொருளாதாரப் படுகுழியில் இருந்து மீள்வதற்கும் ஒரு பெரிய தடையாக உள்ளது.

மின்சாரத்தின் அதிக விலையைக் குறைக்க, நமது அரசாங்கம் புதிய எரிசக்தித் துறைகளில், குறிப்பாக சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

இலங்கையை பிராந்தியத்தில் மிகக் குறைந்த மின்சார விலைகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக மாற்றவும், எண்ணெய் சார்ந்த மின் உற்பத்தி, சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களை நோக்கி மாற்றமும் கொள்முதல் மற்றும் ஏல செயல்முறையை செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது-என்றார். (அ)

# தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும்

## மின்சார தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 19

பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், தற்போது முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் என மின்சார தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

மின்சார சபையின் தன்னிச்சையான மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 4 ஆம் திகதி முதல் மின்சார தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.


இந்நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையின் மற்றொரு கட்டமாக, சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அதன்படி, நேற்று இரண்டாவது நாளாகவும் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தது என மின்சார தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இருப்பினும், அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளை தொடர்ந்து புறக்கணித்தால், தற்போது முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளார்.

# இன்று சுற்றுப்பாதையில் ஏவப்படுகின்றது இலங்கையின் 3ஆவது செயற்கைக்கோள்!

கொழும்பு, செப். 19



உள்ளூர் பொறியாளர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவத்துடன் உருவாக்கப்பட்ட இலங்கையின் மூன்றாவது சிறிய செயற்கைக்கோள் இன்று வெள்ளிக்கிழமை சுற்றுப்பாதையில் ஏவப்பட உள்ளதாக மொறட்டுவையில் உள்ள ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனம் அறிவித்துள்ளது.

'பேர்ட்ஸ்-எக்ஸ் ட்ரகன்பிளை' என்று பெயரிடப்பட்ட இந்த செயற்கைக்கோள், ஓகஸ்ட் 24 அன்று நாஸாவால் ஏவப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ்-33 ரொக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு கொண்டு செல்லப் பட்டது.

முன்னதாக, 2019 ஆம் ஆண் டில், இலங்கை தனது முதல் சிறிய-செயற்கைக்கோளான 'ராவணன்-1' ஐ வெற்றிகரமாக ஏவியது.

மேலும் 2022 ஆம் ஆண்டில், ஐந்து சர்வதேச கூட்டாளர்களை உள்ளடக்கிய பன்னாட்டு தொழில்நுட்ப ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக 'கிட்சூன்' செயற் கைக்கோள் ஏவப்பட்டது.

அதன்படி, 'பேர்ட்ஸ்-எக்ஸ் ட்ரகன்பிளை' என்ற சிறிய செயற்கைக் கோள் இன்று பிற்பகல் 2:15 மணிக்கு சர்வதேச விண் வெளி நிலையத் திலிருந்து அதன் நியமிக்கப்பட்ட சுற்றுப்பாதை யில் செலுத்தத் திட்டமிடப்பட் டுள்ளது.

இது இலங்கையின் விண்வெளி தொழில்நுட்ப பயணத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது. (அ)

# செப். 25 முதல் சிறுவர் தின தேசிய வாரம் பிரகடனம்!

கொழும்பு, செப். 18

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 25ஆம் திகதி முதல் சிறுவர் தின தேசிய வாரம் பிரகடனப்படுத் தப்படவுள்ளது.

இலங்கை உள்ளிட்ட அதிகமான நாடுகள் ஒக்ரோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை கொண்டாடுகின்றன.

அதற்கமைய, இந்த ஆண்டு, அன்புடன் காப்போம் - உலகை வெல்வோம் எனும் தொனிப்பொருளின் கீழ் சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் நெறிப்படுத்தலில், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டக் கோவையை நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை பிரதான தேசிய வைபவம் உள்ளிட்ட செயற்பாட்டுத்திட்டம் சிறுவர் தின தேசிய வாரம் - 2025 எனப் பிரகடனப்படுத் தப்படவுள்ளது.

அதற்கமைய, 25 ஆம் திகதி சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் பாடசாலை அதிபர்களின் வகிபாகங்கு தொடர்பாக தெளிவூட்டப்படவுள்ளது.

26 ஆம் திகதி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற மோட்டார் வாகனங்களை நாடளாவிய ரீதியில் சோதனை செய்தல் மற்றும் ஸ்ரிக்கர் ஒட்டுவதற்கும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுவை உருவாக்குதல் மற்றும் மீளமைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

27 ஆம் திகதி சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களின் வகிபாங்கு பற்றி முன்பள்ளி ஆசிரியர்களைத் தெளிவூட்டுதலும், 28 ஆம் திகதி பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுவதைத் தடுத்தல் பற்றி சமூகத்தைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

29 ஆம் திகதி சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் சமயத் தலைவர்களின் பணிப்பொறுப்புக்கள் பற்றி தெளிவூட்டலும், 30 ஆம் திகதி சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒக்ரோபர் உலக சிறுவர் தின தேசிய வைபவம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், வாரம் முழுவதும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ள பிள்ளைகளை அடையாளங்காணல் மற்றும் வீதியோரச் சிறுவர்களை சோதனை செய்வதற்குரிய சுற்றி வளைப்புக்களை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹெரோயினுடன் பிக்கு உள்ளிட்ட மூவர் கைது!

கொழும்பு, செப். 19

ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பிக்கு உள்ளிட்ட மூன்று பேரை மாத்தளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவரிடம் இருந்து 10.3 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிக்கு அளவ்வ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரையொன்றில் சேவையாற்றிய 38 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அவருடன் கைதான ஏனைய இரண்டு பேரும் 29 மற்றும் 31 வயதுடையவர்கள் எனவும் அவர்களிடம் இருந்து 17 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைதான மூன்று சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் பொல்கஹவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 7 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டது. (அ)

# கடல் வழிப் பாதுகாப்பு, பொருளாதாரம் இலங்கை- அமெரிக்கா கலந்துரையாடல்

கொழும்பு, செப். 19

இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங், வெளிவிவகார, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடியுள்ளார்.

திறந்த வர்த்தகம் மற்றும் பாதுகாப்பான கடல்வழிப் பாதைகளுக்கு முக்கியமான பிராந்திய மான இந்தோ-பசிபிக் பகுதியில் பிராந்திய ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன். நியாயமான மற்றும் சமநிலையான வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்தும் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை பரந்த அளவில் உள்ளது என்றும், "துறைமுகங்கள் முதல் மக்கள் வரை", அதாவது வணிகம் மற்றும் சமூக தொடர்புகள் இரண்டிலும் ஒத்துழைப்பு தேவை என்றும் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துநகர் விளைநிலங்களை உடனடியாக திருப்பிக்கொடு!

## திருமலை மாவட்ட செயலகம் முன் போராட்டம்

திருகோணமலை, செப். 19

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் தங்களின் விவசாய நிலங்களை அபகரித்து தனியார் கம்பனிகளுக்காக சூரியமின் சக்தி திட்டத்துக்கு வழங்கப்பட்டதை யடுத்து நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மக்கள் போராட்ட முன்னணியின் செயல்குழு உறுப்பினர் வசந்த முதலிகே உட்பட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள், முத்துநகர் விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது அபகரிக்கப்பட்ட விவசாய காணிகளை மீட்டுத் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்துநகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு, நெல் வயல்கள் இல்லாமல் நாங்கள் மண்ணையா சாப்பிடுவது, பொய்கள் வேண்டாம் போன்ற பதாகைகளை தாங்கியிருந்தனர்.



இதன்போது கருத்துரைத்த விவசாயிகள் கூறுகையில், தற்போது மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் விவசாய செய்கைக்காக நிலங்களை தயார் செய்ய வேண்டியுள்ளது. மாவட்ட செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது சூரிய மின் திட்டத்துக்கு பயன்படுத்தாத நிலங்களில் பயிர்ச் செய்கை ஆரம்பிக்க முடியும் என கூறிவிட்டு தொடர்ந்தும் கம்பனிகளுக்கு விளை நிலத்தை வழங்குகின்றனர் என்று கவலை வெளியிட்டனர்.

இந்தப் போராட்டத்தை தொடர்ந்து முத்துநகர் விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

(எ-12)

## உடல் ஆரோக்கிய மேம்பாட்டு நிகழ்வு

அக்கரைப்பற்று, செப். 19

"மறுமலர்ச்சி நகரம்" எனும் கருப்பொருளில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனை, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுடன் இணைந்து அக்கரைப்பற்று மாநகர சபை ஒழுங்கு செய்திருந்த இரத்ததானம், தொற்றா நோய்களுக்கான பரிசோதனை மற்றும் இலவச கண் பரிசோதனை உள்ளிட்ட உடல் ஆரோக்கிய செயல்திட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை அக்கரைப்பற்று ஹல்லாஜ் அரங்கில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் எம். அதாவுல்லாஹ், ஆணையாளர் எம். நௌபீஸ் உட்பட உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் பங்குபற்றி, இலவச சேவைகளை பெற்றுக் கொண்டதுடன் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

(எ)

## கல்முனை ஆதார மருத்துவமனைக்கு உன்னத சேவைக்கான தேசிய விருது

கல்முனை, செப். 19

இலங்கையில் நோயாளர் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் மருத்துவமனைகளை கௌரவிக்கும் விழாவில் அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

மத்திய அரசின் கீழுள்ள மருத்துவமனைகளுக்கு இடையே இடம்பெற்ற இப் போட்டியில் கல்முனை ஆதார மருத்துவமனை மட்டுமே வடக்கு - கிழக்கில் இவ்விருதுக்கு தெரிவாகியுள்ளது.

உலக நோயாளர் பாதுகாப்பு தினம் -2025 தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு கோல்பேஸ் விடுதியில் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போதே பாராட்டு சான்றிதழ் கிடைக்கப்பெற்றது.

(எ)



## குச்சவெளியில் 87 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கல்

திருகோணமலை, செப். 19

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு திருகோணமலை, குச்சவெளி பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய "வளமான நாடும் - அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளில் "மறுமலர்ச்சி நகரம்" எனும் தேசிய வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபைக் குட்பட்ட 87 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கலந்து கொண்டார். இதன்போது, குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட 87 குடும்பங்களுக்கான காணி உறுதிப்பத்திரம், மதஸ்தலங்களுக்கான உபகரணங்கள், வியாபாரப் பத்திரங்கள், மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விரர்களுக்கான சான்றிதழ் மற்றும் கிண்ணங்கள், சிறு கைத்தொழில் முனைவோருக்கான வியாபார அனுமதிப்பத்திரங்கள் போன்றனவற்றை வழங்கி வைத்தார்.

(எ)

## மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா அம்பாறைக்கு பயணம்

அம்பாறை, செப். 18

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச செயலகங்களின் மகளிர் செயற்பாட்டு உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடலில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் முதல் தடவையாக கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைப்பாளர் எம்.ரி. வாசனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினராக, பிரதியமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவருமான வசந்த பியதிஸ்ஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஆதம்பாவா, முத்து ரத்வத்த, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.அன்சார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மூவினங்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

(அ)

## ஐஸ் போதை மற்றும் கஞ்சா வைத்திருந்த மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது

நுவரெலியா, செப். 19

ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கினிகத்தேனை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

ஓட்டோ ஒன்றில் கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக கினிகத்தேனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடவடிக்கையை மேற்கொண்டு, கினிகத்தேனை பிளாக்வாட்டர் பகுதியில் ஓட்டோவை நிறுத்தி சோதனை செய்தனர். ஓட்டோ சாரதியிடம் ஒரு கஞ்சா பொட்டலமும் பின் இருக்கையில் இருந்து பயணித்த நபரிடம் 14 கஞ்சா பொட்டலங்களும், ஐஸ் போதைப்பொருள் பொட்டலமும் கண்டுபிடிக்கப்பட்டன.

15 பொட்டலங்களில் பொதி செய்யப்பட்ட 14, 630 மில்லி கிராம் கஞ்சா அவர்களிடம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேக நபரிடமிருந்து ஐஸ் வாங்கிய கடத்தல்காரர் பற்றிய தகவல்களைப் பெற்று, வட்டவளை பகுதியில் உள்ள வீட்டில் தங்கியிருந்த போது சந்தேக நபரைக் கைது செய்தனர். வீட்டை சோதனையிட்டபோது, விற்பனைக்காக தயாரிக்கப்பட்ட 6,190 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் 70 பொட்டலங்களை கண்டுபிடித்தனர்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் 20 - 25 வயதுக்குட்பட்டவர்கள். மேலும் கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் ஈசிஹாஷ் முறை மூலம் பணத்தைப் பெற்று, போதைப்பொருட்களை விற்பனை செய்வது தெரியவந்துள்ளது.

(எ)

## "எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது சொத்து விவரங்களை வெளியிடவேண்டும்"

மட்டக்களப்பு, செப். 19

தேர்லுக்கு முன்னரும் தேர்தலுக்குப் பின்னரும் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொத்து விவரங்களை வெளியிட்டிருக்கின்றோம். முடியுமாகயிருந்தால் நாமல் ராஜபக்ஷ, ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உங்களது சொத்துவிவரங்களை வெளிப்படுத்தி காட்டுங்கள் என மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு சவால் விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டு திருத்தத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை கிழக்கு மாகாண மட்டக்களப்பு கட்டடங்கள் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## தமிழ்-முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தில் இணைந்துதான் செயல்பட வேண்டும்

### சுமந்திரன் சொல்கிறார்

நிந்தவூர், செப். 19

தமிழ்ச் சமூகமோ, முஸ்லிம் சமூகமோ எதிர்காலத்தில் இலங்கையில் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் இணைந்துதான் செயல்பட வேண்டும். அந்த இணைவு எமது தனித்துவ அடையாளங்களை அழித்து விடுவதாக இல்லாமல், மாறாக அவற்றை உறுதி செய்வதாக இருக்க வேண்டுமென இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய பெருந்தலைவர் எம். அஷ்ரபின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு "தோப்பாகிய தனிமரம்" எனும் தொனிப் பொருளில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகல...

தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் பரந்தளவிலானதும் பன்முக அடிப்படையிலானதுமான இலங்கை - இந்திய உறவுகள், நாட்டின் அபிவிருத்தி பணிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

### யாழ்ப்பாணத்தின்...

முன்னகர்த்துவார்கள். இவர்களை ஒருங்கிணைத்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் செயல்படுவார். பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், பவானந்தராஜா ஆகியோரிடமும் இது தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ள முடியும் - என்று போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்போது, பேருந்து சேவைகள், வீதிகள் திருத்தம், புகையிரத, சிவில் விமான சேவைகள், கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் இ. சந்திரசேகர், வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், க. இளங்குமரன், ச. சிறிபவானந்தராஜா மற்றும் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

### மோட்டார்...

ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பிரதான வீதிகளில் அதிவேகத்தில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் கிளை வீதிகளுக்கு திரும்பும் சந்தர்ப்பங்களிலும் கிளை வீதிகளில் இருந்து பிரதான வீதிகளுக்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களில்தான் விபத்துகளும் - மரணங்களும் அதிகம் சம்பவித்துள்ளன. இவற்றில் தமிழ் மக்களே அதிகளவில் பலியாகின்றனர் - என்றார்.

இதேநேரம், யாழ். மாவட்டத்தில் சாரதிய பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் முறையாக பயிற்சிகளை வழங்குகின்றனவா அங்கு முறைகேடுகள் இடம்பெறுகின்றனவா என்பவை தொடர்பில் பொலிஸார் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்கா அறிவுறுத்தினார். (ஐ)

### மின்சார...

மின்சார சபையை பிரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார சபை தொழிற்சங்கங்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் ஈடுபட்டன.

இதனால், நாடளாவிய ரீதியில் உள்ள மின்சார சபை கிளைகளில் நிலவிய ஊழியர் பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரமே வழங்கப்பட்டன.

அத்துடன், மின்சார சபை ஊழியர்களின் சலுகைகளை குறைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை இரத்து செய்யுமாறு தெரிவித்து நேற்றும் மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை பிரதான பணிமனை முன்பாகக் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்பகல் 11.30 மணியளவில் ஆரம்பமான போராட்டத்தில் வீதியின் இரு மருங்கிலும் பல நூறுபேர் கூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் காலி வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன் சில மணி நேரத்துக்கு போக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும், போக்குவரத்தை சீர் செய்வதற்காகவும் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் போராட்டக்களத்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:
# விசாரிக்க புதிய மேல்நீதிமன்ற அமர்வை நிறுவுமாறு கோரிக்கை!

கொழும்பு, செப். 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைக்காக மூவரடங்கிய புதிய மேல் நீதிமன்ற அமர்வை நிறுவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது .

பிரதம நீதியரசரிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்தார்.

பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் புலனாய்வு தகவல் கிடைத்திருந்தும், அதனைத் தடுக்க தவறியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பிலேயே இந்த கோரிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்ட மா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தினார்.

இதையடுத்து, குறித்த வழக்கு தொடர்பான அடுத்தகட்ட விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

### ரோபோ சங்கர்...

சேர்க்கப்பட்டார்.

அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் நேற்று அவர் காலமானார். அவரின் மறைவுக்கு திரையுலக பிரபலங்கள், ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

### அநுரவின்...

நேற்றைய தினம் மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி தபாலகத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டி, உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 30 வருடங்களாக அரச சொத்துகளையும் இடங்களையும் பாவித்து கொண்டிருந்த தலைவர்கள் அவர்களுடைய சொந்த வீடுகளுக்கு போய்க் கொண்டிருக்கின்றார்கள். ஐந்து வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்களின் ஓய்வூதியம் இரத்து செய்யப்படும். அது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்று ஒரு வருடத்தை கடக்கும்நிலையில் நாட்டில் அதிகளவு மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது மக்களுக்கு விளங்கியுள்ளது - என்றார். (ஐ)

### திருமலை...

இருந்து வடகிழக்கே சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஹகனத ராவ, ஹக்மான, பல்லே கலை மற்றும் புத்தங்கல ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள நிலநடுக்க கண்காணிப்பு நிலையங்களிலும் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### இந்த...

வருகிறது. அத்துடன், தொழிற்சாலைகளையும் மீள உருவாக்கி வருகிறது. எமது மாகாணத்துக்குத் தேவையாக உள்ள வேலை வாய்ப்பும் வருமான மீட்டலும் இதனூடாக கிடைக்கப்பெறும்.

எமது மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதலான அக்கறையுடன் செயல்படுகின்ற அமைச்சர் பிமல் ரத்நாயக்க, எமது மாகாணத்துக்கு எவ்வாறான உதவிகளைச் செய்யவேண்டும் என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோர் இருவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இ. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்கள் க. இளங்குமரன், ச. சிறீபவா னந்தராஜா, ஜெ. றஜீவன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டவர் குருநகரில் கைது

யாழ்ப்பாணம், செப். 19

ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை கைது செய்தபோது அவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் குருநகரை சேர்ந்த 36 வயதுடையவராவார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03-05)

# மருத்துவரை மறித்து தாக்குதல்; சந்தேகநபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 19

உரும்பிராயில் வீதியில் சென்ற மருத்துவரை மறித்துத் தாக்கிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு உரும்பிராய் பகுதியில் வீதியில் மருத்துவர் ஒருவர் பயணித்துள்ளார். மதுபோதையில் வீதியில் நின்ற சிலர் அவரின் பயணத்துக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

தான் செல்வதற்கு வழிவிடுமாறு கேட்ட மருத்துவரை அந்தக் கும்பல் தாக்கியது. இதில், மருத்துவர் காயமடைந்தார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்தார்.

அங்கு வந்த பொலிஸார் இருவரை கைது செய்தனர். ஏனையோர் தப்பிச் சென்றிருந்தனர். காயமடைந்த மருத்துவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், கைதான சந்தேகநபர்கள் இருவரும் எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பில், தகவல்கள் வெளியான நிலையில் பொலிஸார் விடுவித்த சந்தேகநபர்கள் இருவரையும் நேற்றைய தினம் கைது செய்தனர் என்று தெரிய வருகிறது. (ஐ-05)

# இந்திய மீனவர்களால் இலங்கை மீனவர்களின் ரூ. 22 கோடி பெறுமதியான சொத்துகள் சேதம்!

கொழும்பு, செப். 19

இந்திய கடற்றொழிலாளர்களின் இழுவைமடி படகுகளால் 22 கோடி ரூபா பெறுமதியான இலங்கை கடற்றொழிலாளர்களின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம், சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளிக்கையிலேயே திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் தகவல்களின் அடிப்படையில் இலங்கை மற்றும் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்னையால் இரு தரப்பிலும் சொத்துக்கள் மற்றும் உயிர் சேதங்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

இந்தியாவின் இழுவைமடிப் படகுகளால் 2025 மார்ச் மாதம் வரையில், 1763 இலங்கை மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 22 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்து சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்திய கடற்றொழிலாளர்கள் கடலடியில் இழு வலை மடியை பயன்படுத்தி மீன் பிடிப்பதால் கடல் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன், இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள கடற்றொழிலாளர்களை நேரடியாக பாதிக்கிறது.

அதற்கமைய, 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இந்தியாவின் இழுவை மடி படகுகளால் 1,676 இலங்கை கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மார்ச் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், சுழிபுரம், ஊர்காவற்துறை மற்றும் வேலணை மேற்கு மீனவப் பிரிவுகளைச் சேர்ந்த 87 கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 62.92 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, 2018 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 236 இலங்கை கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமான 70 படகுகள் இந்திய அதிகரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், 33 படகுகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 47 படகுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை என கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இவ்வாண்டு முதல் 7 மாதங்களில் 300 கொலைச் சம்பவங்கள் பதிவு!

## மக்களின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல்

கொழும்பு, செப். 19

**பொலிஸ் தரவுகளின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் 300 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், வீதி விபத்துக்கள் மட்டுமல்லாது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் தொடர்ந்து பொதுமக்களின் பாதுகாப்புக்குக் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.**

பொலிஸ் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் 300 கொலைகள் பதிவாகியுள்ளன.

2024 ஆம் ஆண்டில் மொத்தமாக 556 கொலைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

துப்பாக்கிச்சூடுகள் தொடர்ந்து பொதுமக்களின் பாதுகாப்புக்குக் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளன.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் 103 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 61 பேர் கொல்லப்பட்டதுடன் 47 பேர் காயமடைந்தனர்.

இருப்பினும், 2025 ஆம் ஆண்டில், ஜனவரி முதல் செப்ரெம்பர் 9 அன்று அம்பலாங்கொடையில் நடந்த சமீபத்திய சம்பவம் வரை, 99 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளன, இதன் விளைவாக 50 பேர் உயிரிழந்ததுடன் 56 பேர் காயமடைந்தனர்.

இந்த ஆண்டும் கடந்த ஆண்டும் நடந்த பெரும்பாலான உயிரிழப்பு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு, குறிப்பாகப் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையேயான போட்டியே காரணம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதேவேளை, ஆபத்தான விகிதத்தில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

செப்ரெம்பர் 16 ஆம் திகதி நிலவரப்படி, நாடு முழுவதும் உயிரிழப்பை ஏற்படுத்தும் வகையில் 1,838 விபத்துகள் நடந்துள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதில் 2025 ஆம் ஆண்டில் இது வரை 1,955 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு 3,708 கடுமையான விபத்துக்கள், 6,827 சிறிய விபத்துக்கள் மற்றும் 2,858 சேதம் மட்டுமே ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்த ஆண்டு மொத்த வீதி விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 2024 புள்ளிவிவரங்களை நெருங்கி வருவதாகக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, இலங்கையில் உயிரிழப்பை ஏற்படுத்தும் வகையில் 2,253 விபத்துக்களும், 2,259 மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும் 6,762 கடுமையான விபத்துக்கள், 9,945 சிறிய விபத்துக்கள் மற்றும் 5,629 சேதம் மட்டுமே ஏற்பட்ட சம்பவங்களும் இதில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# துஷித ஹல்லொலுவ பிணையில் விடுதலை!

கொழும்பு, செப். 19

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவ நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேக நபருக்கு தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகள் வழங்கி வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடை விதித்தும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவயை நேற்றுக் காலை சிறைச்சாலை அதிகாரிகள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாரஹேன்பிட்டி பகுதியில் தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் ஹல்லோலுவ பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடந்த சம்பவம் தொடர்பான விசாரணையில் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்தியஸ்த சபைகளை பலப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, செப். 19

மத்தியஸ்த சபைகளை பலப்படுத்தி, நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்த சபை தொடர்பில், நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், 16 மாவட்டங்களில் காணி பிரச்னைகளுக்கான விசேட மத்தியஸ்த சபைகளும் நிறுவப்பட்டுள்ளன.

இதேவேளை, நீதிமன்றங்களுக்கு பரிந்துரைக்கப்படும் நிதி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான வழக்குகளை குறைப்பதற்கு, விசேட மத்தியஸ்த சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் முதற்கட்டமாக, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பொலன்னறுவை, கண்டி மற்றும் மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களில் நிதி பிரச்னை தொடர்பில் விசேட மத்தியஸ்த சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மத்தியஸ்த செயல்முறையை வலுப்படுத்துவதன் ஊடாக, நீதிமன்றங்களில் குவிந்துள்ள, இரண்டு இலட்சம் வழக்குகளை ஒரு வருடத்தில் குறைக்க முடியும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். (அ)

# தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம் நூல் வெளியீடு இன்று மாலை கொழும்பில்!

யாழ்ப்பாணம், செப். 19




பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய "தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்" நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் வி.ரி. இளங்கோவனும் கருத்துரைகளை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். ந.ஹியா, கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் எஸ்.ஜெய்சங்கர், சமூக அரசியல் செயற்பாடடாளர்கள் தெ.மதுசூதனன், யதீந்திரா ஆகியோரும் நிகழ்த்துவர். இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகும். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் எதிர்காலத்தில் நல்லுறவு!

## கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, செப். 19

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களுடன் நல்லுறவை பேணும் நோக்கிலேயே கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து தடைகளை நீக்க ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இருப்பினும், தாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாக இருக்கிறோம்.

எனவே, ஐக்கிய தேசிய கட்சியின் பதவி நிலை குறித்து தங்களுக்கு கவலையில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் இந்த முடிவானது, நம்முடன் இணைந்து பணியாற்றும் முயற்சியாக மற்றும் நல்லெண்ணத்தின் ஒரு செயலாகப் பார்க்கிறோம்.

நாங்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தே ஐக்கியமக்கள் சக்தியை உருவாக்கினோம்.

எனவே, ஒரே குறிக்கோள் இருந்தது.

கொள்கை ரீதியாக சில வேறுபாடுகள் மட்டுமே இருந்தன.

எனவே எதிர்காலத்தில், நாங்கள் அனைவரும் ஒன்றாகச் செயல்படவேண்டும்-என்றார். (அ)

# சு.கவின் மறுசீரமைப்பு இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, செப். 19

சுதந்திர கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் இன்று முதல் ஆரம்பாகும் என முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்திற்கான நான்கு புதிய மாவட்ட அமைப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாத இறுதிக்குள், சுதந்திரக் கட்சியின் அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் மறுசீரமைப்புப் பணிகள் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கிறோம்.

அரசாங்கம் இருக்கிறதா? இல்லையா? என்ற சந்தேகம் தற்போது நிலவுகிறது.

கிராமத்தில் விவசாயிகள் துன்புறுகிறார்கள்.

நாட்டில் மற்ற அனைத்து பிரச்னைகளும் இருக்கின்றன.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகள் எதுவும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக அனுராதபுரம் பற்றி பேசவேண்டும் என்றால், கடந்த தேர்தலில் வாக்களித்த விவசாயிகள் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர்.

அவர்களுடைய அனைத்து நம்பிக்கைகளும் சிதைந்து விட்டன.

மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்பட்டதா என்பது எங்களுக்குத் தெரியவில்லை-என்றார். (அ)

# அரசுரிமை அறவிடுவதில் தவறான நடைமுறைகள்!

## அரசாங்கத்திற்கு பெரும் நிதி இழப்பு

கொழும்பு, செப். 19

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அரசுரிமையை சரியான முறையில் அறவிடாமையால் அரசாங்கத்துக்கு பெருந்தொகையான நிதி இழப்பு ஏற்பட்டிருப்பது கோப் குழுவில் தெரியவந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தலைமையில் இடம்பெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தின்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான புத்தளம், முக்குத்தொடுவாவ தோட்டத்தில் மணல் அகழ்வுக்காக தனியார் நிறுவனத்திற்கு 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் 2024 செப்ரெம்பர் மாதம் வரையில் அகழ்வுப் பணிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரரினால் 36,531 முதல் 45,561 கியூப் வரையிலான மணல் அகற்றப்பட்டுள்ளபோதிலும், 1,564 கியூப் மணலுக்கு மாத்திரமே அரசுரிமையாக 6 இலட்சத்து 86,464 ரூபாய் செலுத்தப்பட்டிருப்பதாக கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய 12 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான அரசுரிமை இழக்கப்பட்டிருப்பதாக கோப் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கருங்கல்லை உடைக்கும்போது கல் குவாரிக்கு வழங்கப்பட்டுள்ள வெடிபொருட்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு குறித்த கல்குவாரிக்கான அரசுரிமை அறவிடப்பட்டதிலும் முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், சட்டவிரோதமாக வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுவதால், அகற்றப்படும் கருங்கல்லின் உண்மையான அளவைக் கணக்கிட முடியாது என குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் மூலம் அரசுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்படுவதாகவும் கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள கருங்கல் குவாரிகள் மூலம் கருங்கல் பெரிய அளவில் உடைக்கப்பட்டாலும் அரசுக்கு சிறிய அளவு வருமானம் மட்டுமே கிடைப்பதாகவும் கோப் குழுவில் தெரியவந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org